**செய்தி வெளியீடு எண்: 720** **நாள்:25.10.2019**

**<u>செய்தி வெளியீடு</u>**

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரத்தில் நடைபெற்ற இந்திய – சீன உச்சிமாநாட்டிற்கான ஏற்பாடுகளை சிறந்த முறையில் செய்தமைக்காக இந்தியாவிற்கான மேதகு சீன நாட்டு தூதர் திரு. சன்வெய்டங் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இந்தியா – சீன உச்சிமாநாட்டிற்கு வருகை புரிந்த மேதகு சீன குடியரசுத் தலைவர் மற்றும் குழுவினருக்கு மிகச் சிறந்த முறையில் வரவேற்பு ஏற்பாடுகளை செய்தமைக்காகவும், வழியெங்கும் சிறப்பான பல்வேறு கலைநிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தமைக்கும் சிறந்த உபசரிப்பிற்காகவும், தமிழ்நாடு அரசிற்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துள்ளார்.

சீன இந்திய மக்களிடையே கலாச்சாரம் மற்றும் பரிமாற்றங்களையும் மென்மேலும் மேம்படுத்துவோம் என்றும் தனது நன்றி கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**